சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.
வழக்கு எண் :OS:233/2018

2023ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 4ம் நாள் வாதி சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.எஸ்.பேச்சியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் பஞ்சவர்ணம் (PW1) | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

04.09.2023

1) நான் வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் வீடு கிரையம் வாங்கினேன் அது எனக்கு சொந்தம் என்று பரிகாரம் கேட்டுள்ளேன். தாவா சொத்துக்களின் சர்வே எண் எனக்கு தெரியாது. கதவு எண் எனக்கு தெரியும். 1 லக்க சொத்தின் விஸ்தீரணம் 30 அடி நீளம், 10 அடி அகலம் ஆகும். 2 லக்க சொத்தின் விஸ்தீரணம் எனக்கு சொல்ல தெரியாது. தாவா சொத்து ஆதியில் அந்தோணிசாம்பான் என்பவருக்கு எப்படி பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கு அந்தோணிசாம்பான் பெயரில் எந்தவித ஆவணங்களும் கிடையாது என்றால் சரிதான். அந்தோணிசாம்பானின் இறப்பு சான்றிதழ் நான் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யவில்லை. அந்தோணிசாம்பானின் வாரிசு சான்றிதழ் நான் தாக்கல்செய்யவில்லை. எனக்கு எழுதபடிக்க தெரியும். என்னுடைய வழக்கில் அந்தோணிசாம்பானின் மகன்கள் மரியசூசை மற்றும் சந்தானம் ஆகியவர்களுக்கிடையே யார் முன்னிலையில் எங்குவைத்து பாகபிரிவினை நடைபெற்றது என்று நான் என் வழக்குரையில் சொல்லவில்லை.

2) அவர்கள் வாய்மொழியாக பாகபிரிவினை செய்து கொண்டதற்கு ஆவணங்கள் எதுவும் ஏற்படுத்தி கொள்ளவில்லை என்றால் பாகம் பரித்து கொண்டதாக சொன்னார்கள். சந்தானம் எந்த வருடத்திலிருந்து  தாவா சொத்தை அனுபவம் செய்து வந்தார் என்று நான் வழக்குரையில் சொல்லவில்லை  என்றால் சரிதான். சந்தானம் தாவா சொத்துகளை அனுபவம் செய்து வந்தார் என்பதை காட்ட  வரி ரசீது எதுவும் தாக்கல்செய்யவில்லை. சந்தானத்தின் மனைவி மற்றும் பெண்மக்கள் ரூபிராணி மற்றும் செல்வி ஆகியோரை பற்றி சொல்லவில்லை என்றால்  அவர்கள் பெண்மக்கள் யாரும் இல்லை என்று சொன்னார் அதனால் நான் சொல்லவில்லை.

3) சந்தானத்தின் வாரிசு சான்று தாக்கல் செய்தால் அவருக்கு பெண்மக்கள் உள்ளது பற்றி தெரியவரும் என்றால் சரிதான். சந்தானத்தின் வாரிசுசான்றிதழ் நான் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். சந்தானத்திற்கு சுந்தரராஜ், செல்லையா, ராஜா ஆகியோர்களை தவிர ரூபிராணி மற்றும் செல்வி ஆகிய பெண்மக்கள் வாரிசுகளாக உள்ளார்கள் என்பது எனக்கு தெரியும்எ ன்றும் நான் வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. சந்தானத்தின் ஆண்வாரிசுகளை விசாரித்தால் அவர்களுடன் பிறந்த பெண்வாரிசுகள் இருக்கிறார்களா என்று தெரியவரும் என்றால் சரிதான். செல்லையா எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. செல்லையாவின் இறப்பு சான்றை நான் தாக்கல் செய்துள்ளேன். சாட்சி தானாக சொல்கிறார் செல்லையா 1980 வருடம் இறந்தார்.

4) சந்தானத்தின் ஆண்மக்களான சுந்தரராஜ், செல்லையா, ராஜா ஆகியோர் இடையில் எங்கு வைத்து யார் முன்னிலையில் பாகம் பிரிக்கப்பட்டது என்று என் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.  பாகபிரிவினை சம்மந்தப்பட்ட ஆவணங்கள் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். செல்லையா பெயரில்  வரிரசீது எதுவும் நான் தாக்கல்செய்யவில்லை என்றால் அந்தோணி பெயரில் தான் இருந்தது. எந்த வருடத்திலிருந்து செல்லையா தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்று எனக்கு தெரியாது. எனக்கு பத்திரம் போட்டு தரும் போது அவர் அனுபவத்தில் இருந்தது.  செல்லையாவின் வாரிசுகள் என்று சொல்லக்கூடிய சாந்தா, கொண்டசாமி மற்றும் ரவி ஆகியோர் வாரிசுகள் என்பதை காட்ட வாரிசுசான்று தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். சாந்தா, கொண்டசாமி  மற்றும் ரவி ஆகியோர் தாவா சொத்துக்களை

அனுபவம் செய்து வந்ததை காட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு எனது பெயரில் உள்ள கிரையம் செய்த ஆவணத்தின் அசல் தாக்கல்செய்யவில்லை என்றால் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். தாவா சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பாக வில்லங்கசான்று எடுத்து பார்க்கவில்லை என்றால் பார்த்தேன். அந்த வில்லங்கசான்றை நான் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான்.

5) தாவா சொத்துக்களை ரூ.1,50,000/-க்கு கிரையம் வாங்கினேன். வழக்கு தாக்கல் செய்த காலத்தில் தாவா சொத்தின் மதிப்பு ரூபாய் 20 லட்சம் இருக்குமா என்றால் இருக்காது. எவ்வளவு இருக்கும் என்றால் ரூ.1,50,000/- இருக்கும். தாவா சொத்தை வாங்கும் போது வருவாய் ஆவணங்களை நான் பார்வையிட்டேனா என்றால் அவர்கள் சொல்லி தான் வாங்கினேன். அந்தோணி பெயரில் என்னஎன்ன ஆவணங்கள் இருக்கிறதுஎ ன்று நான் பார்க்கவில்லை. வா.சா.ஆ 1 ஆவணத்தில் கண்ட சொத்து தாவா சொத்து தான் என்பதை காட்ட தொடர்புடைய ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் கிரையம் வாங்கும் போது தாவா சொத்து காலிமனையாக இருந்தது என்றால் இல்லை வீடாக இருந்தது.

6) பிரதிவாதிகள் தாவா சொத்தில் அக்கிரமாக அத்துமீறி நுழைந்து குடியிருப்பதாக சொல்லியிருககிறேன். அது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுததேனா என்றால் இல்லை பெரிய ஆட்களை வைத்து பேசினேன். அவர்கள் நீதிமன்றத்தில் பார்த்து கொள்ள சொன்னார்கள். அந்த பெரிய ஆட்கள் பெயரை வழக்குரையில் சொல்லவில்லை என்றால் செப்ஸ்டியான் என்பவரை பேசினேன். அவரை விசாரித்தால் உண்மை தெரியவரும் என்றால் சரிதான். நான் தாவா சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பாக 50 வருடங்களாக பிரதிவாதிகள் குடியிருந்து வருகிறார்கள் என்றால் இல்லை. நான் கிரையம் வாஙகுவதற்கு முன்பாக பிரதிவாதிகள் தாவா சொத்தில் தான் குடியிருக்கிறார்கள் என்றால் இல்லை. பிரதிவாதிகள் தாவா சொத்தில் குடியிருந்த காரணத்தினால் தான் நான் எனது சொந்த ஊரில் குடியிருநதேன் என்றால் இல்லை.

7) 2011 ஆண்டில் தான் தாவா சொத்தை கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான் 2018 ஆண்டில் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வீட்டு

சாவி என்னிடம் தான் இருந்தது. தாவா சொத்தில் நான் குடியிருந்து அனுபவம் செய்து வந்ததாக வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். தாவா சொத்து சம்மந்தமாக நான் கிரையம் பெற்றுள்ள வா.சா.ஆ 1 ஆவணம் சட்டப்படி செல்லாதுஎ ன்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் 1 பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்றால்ச ரியல்ல. நான் கிரையம் வாங்குவதற்கு முன்பாக செல்லையாவின் வாரிசுகளுக்கும் பிரதிவாதிகளுக்கும் பிரச்சனை இருந்தது என்றால் இல்லை. தாவா சொத்துக்கள் சம்மந்தமாக செல்லையாவின் வாரிசுகளுக்கும் பிரதிவாதிகளுக்கும் பிரச்சனை இருந்தது என்றும் அதனால் தான் மோசடியாக நான் கிரையம் வாங்கினேன் என்றால் சரியல்ல. நான் கிரையத்திற்கு மறுபயன் எதுவும் கொடுக்கவில்லை என்றும் அதனால் கிரையம் சம்மந்தப்பட்ட சா ட்சிகளை விசாரித்தால் தான் உண்மை தெரியவரும் என்றால் சரியல்ல. அதனால் தான் நான் வா.சா.ஆ.1 ஆவணத்தில் தாவா சொத்தின் ஆதி உரிமையாளரை பற்றி எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

8) தாவா சொத்தை கிரையம் கொடுத்ததாக சொல்லப்படும் சாந்தா, கொண்டசாமி ஆகியோர் பெயரில் தாவா சொத்து சம்மந்தப்பட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எந்தவித உரிமை மூல ஆவணங்களும் இல்லாமல் தாவா சொத்தை கிரையம் பெற்ற வா.சா.ஆ 1 ஆவணம் சட்டப்படி செல்லாதுஎ ன்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வரி ரசீதுகள் எதுவும் தாவா சொத்திற்குரியது அல்ல என்றும் அவை இந்த பிரதிவாதிகளை கட்டுபடுத்தாது என்றால் சரியல்ல. நான் மேட்டுதொட்டியாங்குளத்தில் குடியிருநது வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் தாவா சொத்தில் உரிமையாளர் என்ற அடிப்படையில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கு காலவரையறை சட்டத்தின் படி தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்தை எனக்கு கிரையம் செய்து கொடுத்ததாக சொல்லப்படும் நபர்களுக்கு தாவா சொத்தில் எந்தவித உரிமையும் கிடையாது என்றும் அதனால் அந்த கிரைய ஆவணத்தின்படி எனக்கு தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் யார் வீடு கட்டினார்கள் என்று எனக்கு நேடியாக தெரியாது. தாவா சொத்தில் உள்ள வீடு 150 வருடங்களுக்கு முந்தையதுஎ ன்று சொன்னார்கள். உண்மையான உரிமையாளரிடம் கிரையம் வாங்காத காரணத்தினால் அந்த கிரையம் செல்லாது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**